## பழைய பேப்பர் முதல் தொகுதியின் முன்னுரை

# நான்

பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோது பின்னாளில் ஒரு ரயில் எஞ்சின் டிரைவராகவோ, விமானியாகவோ, டாக்டராகவோ ஆகவேண்டுமென்றெல்லாம் விரும்பியதாகவே எனக்குத் துளியும் நினைவில்லை. பத்திரிகையாளனாக ஆகித்தீருவது என்ற தீர்மானத்துடன் அதை நோக்கியே இயங்கி வந்திருக்கிறேன். என் இன்னொரு காதலான நாடகத்தில் நான் பன்னிரண்டாவது வயதில் நுழைந்தபோதுகூட எனக்குக் கிடைத்த முதல் வேடம் பத்திரிகை நிருபராகத்தான்.

ஆனால் கல்லூரிப் படிப்பு முடிந்ததும் கிடைத்த முதல் வேலை-பத்திரிகை அலுவலகத்திலேயே என்றபோதும், பத்திரிகையாளனாக அல்ல. இந்தியன் எக்ஸ்பிரஸ் சென்னைப் பதிப்பின் விளம்பரக் கணக்குப் பிரிவில் கடைநிலை ஊழியனாக பணியாற்றிய அந்த ஓராண்டு காலம் ஜர்னலிசத்தைப் புரிந்துகொள்வதைவிட அதிகமாக வாழ்க்கையைப் புரிந்துகொள்ள உதவிற்று.

பத்திரிகையாளனாகவே வாழ்வது என்ற என் தீர்மானத்துக்கு ஓரளவு காரணம் என் அப்பா பத்திரிகையாளராக இருந்தது என்றாலும், என் மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் வேறு துறைகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள்.

என் அம்மா நான் பள்ளிக்கூட ஆசிரியனாகவேண்டுமென்று விரும்பினாள். நான் பத்திரிகை ஆசிரியனானதன் முழுத் துயரத்தையும் சுமந்தவள் அவள்தான். எப்போதும் யாரோடாவது பேசிக்கொண்டிருப்பது என்ற என் விருப்பம்தான் வெவ்வேறு கட்டங்களில் என்னை பத்திரிகை, மேடைப் பேச்சு, நாடகம், வீடியோ என்று மேலும் மேலும் அதிகமான பேச்சு சிநேகிதர்களைத் தேடிப் போவதாக பல சாதனங்களில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

நான் பத்திரிகை நிருபராக, சேர்ந்த நேரம் என் தனிவாழ்க்கையிலும் இந்தியாவின் சமூக வாழ்க்கையிலும் நெருக்கடி நேரம். நிருபர் வேலை கிடைத்த சில மாதங்களிலேயே நானும் அம்மாவும் பெரியம்மாவும் அடங்கிய குடும்பத்தை இந்தியன் எக்ஸ்பிரஸ் கொடுத்த 250 ரூபாய்களில் பராமரிக்க வேண்டியவனாயிருந்தேன். அதே சமயம் இந்திரா அரசாங்கத்தின் தணிக்கை கெடுபிடிகளை சகித்தும் சமாளித்தும் எங்கள் பத்திரிகைப் பணி நடந்துகொண்டிருந்தது. ஆங்கில ஏட்டில் பணியாற்றிவந்தபோதும் என் மனம் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் ஈடுபடுவதையே அவாவியது. அதற்கு வாய்ப்பாக என்னை 1980 ஜனவரியில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிர்வாகம், கணையாழி, கல்கி, குமுதம் ஆகிய ஏடுகளில் எழுதியதற்காக வேலை நீக்கம் செய்தது. அதே சமயத்தில்தான் கணையாழி நிறுவனர்-ஆசிரியர் கி. கஸ்தூரிரங்கனை எக்ஸ்பிரஸ் நிர்வாகம் தினமணியின் இணையாசிரியராக நியமித்த விசித்திரமும் நடைபெற்றது! நான்காண்டுகளுக்குப் பிறகு வேலை நீக்கம் தவறு என்று என் வழக்கில் நீதிமன்ற உத்தரவு வந்ததையடுத்து மறுபடியும் எக்ஸ்பிரசில் பணியாற்றிய சில மாதங்கள் நீங்கலாக அடுத்த பதின்மூன்று வருடங்களாக நான் தமிழ்ப் பத்திரிகையாளனாகவே வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்திவந்திருக்கிறேன்.

அஸ்வினி, எதிரொலி, ஜூனியர் விகடன், முரசொலி, ஜூனியர் போஸ்ட் ஆகிய இதழ்களில் முழுநேரப் பணியில் அவ்வப்போது இருந்தது தவிர பல தமிழ்ப் பத்திரிகைகளுக்குத் தொடர்ந்து எழுதிப் பிழைத்து வந்திருக்கிறேன்.

ஜீவனத்துக்கான வேலை வேறு; நம் சொந்த நெறிமுறைகள் நம்பிக்கைகள் வேறு என்று நான் ஒருபோதும் கருதியதில்லை. இரண்டையும் இணைத்து வாழ முற்படும் வாழ்க்கையில் ரத்தினக் கம்பளங்களைவிட சரளைக் கற்களே அதிகம் தட்டுப்பட முடியும். என் பார்வையை எல்லாவிதத்திலும் ஏற்காதவர்களானபோதும் ஏற்புடைய விஷயங்களில் அவர்களுடன் ஒன்றுபட்டும் பணிபுரியும் வாய்ப்பை எனக்குக் கொடுத்த பத்திரிகை ஆசிரியர்கள் பலர் உண்டு. குறிப்பாக 'முரசொலி மாறனும்', 'ஆனந்தவிகடன்' எஸ். பாலசுப்ரமணியனும் என் கருத்துச் சுதந்திரத்தைப் பெரிதும் மதித்தவர்கள். நான் விரும்பிய சமயத்தில் வேலைக்கு சேரவும் வெளியேறவும் மறுபடியும் சேரவும் அன்போடு என்னை அனுமதித்தவர் பாலசுப்ரமணியன். எந்த விஷயத்தையும் அவர் ஏற்கப் போதுமான காரணம் காட்டி

விவாதித்து ஏற்கச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையைத் தரும் விதத்தில் ஆரோக்யமான விவாதங்களை அவர் ஊக்குவித்தார்.

என்னிடம் உள்ளதைவிட கூடுதலான ஆற்றல் உள்ளது போல எனக்கே பிரமையை ஏற்படுத்தும் வல்லமையுள்ள நண்பர் பத்திரிகையாளர் சின்னக்குத்தூசி, இலக்கியம், ஜர்னலிசம், ஆட்டோ ஓட்டுதல், விவசாயம் எல்லாமே சம அந்தஸ்துக்குரியவைதான் என்ற நிதானத்தைத் தன்னிடமிருந்து எனக்கும் தொற்றவைத்த நண்பர், எழுத்தாளர் அசோகமித்திரன், எக்ஸ்பிரஸ் வழக்கு விசாரணை நாட்களன்று என்னைத் தேடிவந்து காலை உணவும் வாங்கித்தந்து நான்காண்டுகள் என் வழக்கை நட்பின் நிமித்தம் மட்டுமே நடத்திய வழக்கறிஞர் சந்துரு போன்ற சிநேகிதர்கள் தான், பத்திரிகைத்துறையில் எனக்கு சலிப்பு ஏற்பட்ட தருணங்களில் அதிலிருந்து மீள (அவர்களையறியாமலும்) உதவியிருக்கிறார்கள்.

இந்தப் பதினெட்டாண்டுகளில் மூன்று முறை நண்பர்களின் உதவியுடன் சொந்தமாகப் பத்திரிகை நடத்த முயற்சித்த அனுபவங்கள் என்னை வளப்படுத்தியிருக்கின்றன. குறிப்பாக முதல்முறையாக 1982-ல் வெளியிட்ட ‘தீம்தரிகிட’ பொருளாதார சிக்கல்களால் நின்று போகாமலிருந்திருந்தால் என்ற கற்பனை இப்போதும்கூட எனக்கு சுவாரசியமாக இருக்கிறது.

1975-ல் இருந்தது போல இன்று பத்திரிகைத்துறை இல்லை. நிறைய விஷயங்கள் மாறிவிட்டன. குறிப்பாகத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் சுமாரான சம்பளம் கிடைக்கும் நிலை பெருமளவு ஏற்பட்டிருக்கிறது. உறவினர்கள், குடும்ப நண்பர்கள் வட்டாரத்தில் பல பெரியவர்கள் என்னை பதினைந்து வருடங்களுக்கு முன்னால் எக்ஸ்பிரசில் இருந்தபோது ‘சம்பளம் மாசாமாசம் ஒழுங்கா குடுக்கறானா’ என்று அக்கறையோடு கேட்பார்கள். என் அப்பா காலத்தில் நிலைமை அப்படி இருந்ததே காரணம். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அவரால் தரமான நிருபராகவும் பொறுப்பான குடும்பத் தலைவராகவும் இருக்க முடிந்திருக்கிறது என்பதே எனக்கு இத்துறையில் ஈடுபட நம்பிக்கை ஊட்டியது.

இன்று நிறைய இதழியல் படிப்பு வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. தொழில்நுட்பம் பல சாதனைகளை நிகழ்த்த வசதியாக இருக்கிறது. வாசகர் எண்ணிக்கை பலமடங்கு பெருகியிருக்கிறது, ஆயினும் தமிழ் இதழியல் விரிவுபெற்ற அளவுக்கு ஆழப்படவில்லை. துப்பறியும்

ஜர்னலிசம் மதிப்பிழக்கும் அளவுக்கு நையப் புடைக்கப்பட்டுவிட்டது. துடிப்பும் ஆர்வமும் பரபரப்பும் உழைப்பும் அதிகரித்துள்ள போதும் தார்மீக மதிப்பு குறைந்திருக்கிறது.

மொத்த சமூகத்திலும் நெறிகள் பிறழ்வதும் மதிப்பீடுகள் குலைவதும் நடந்துகொண்டிருக்கிற பத்தாண்டுகளில் பத்திரிகைத்துறை மட்டும் எப்படி விலகி நிற்கமுடியும்? சமூக சீர்குலைவை செய்திகளில் மட்டுமன்றித் தன் செயல்பாட்டிலும் அது பிரதிபலிக்கிறது என்றே கொள்ளத்தகும்.

இப்படிப்பட்ட தருணங்களில் எழுத்தாளனாயினும் வேறெந்தப் படைப்பாளியாயினும் சரி இதுவரை நாம் செய்துவந்ததெற்கெல்லாம் ஏதாவது அர்த்தம் இருந்திருக்கிறதா, இருக்க முடியுமா என்று பின்னோக்கிப் பார்ப்பது தவிர்க்க இயலாதது. நானும் அப்படித் திரும்பிப் பார்த்ததன் விளைவே இந்தத் தொகுப்பு. அப்படிப்பட்ட அலசல்களை மேற்கொள்வது மனசுக்குள் பலமுறை நடப்பதுதான் என்றாலும் அதை வாசகர்களுடனும் சஹிருதயர்களுடனும் பகிர்ந்துகொள்ளும் வடிவமாக இத்தொகுதியை சாத்தியப்படுத்தியிருப்பது பொன்விஜயனின் ஆர்வமும் அசைக்கமுடியாத பிடிவாதமும் அவையிரண்டுக்கும் அயராது ஆதரவளிக்கிற வேர்கள் இயக்கமும் தான். நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்குமான வெளிச்சத்தைத் தொடர்ந்து தேடும் கடந்துபோன காலங்கள் பற்றிய ஒரு பத்திரிகையாளனின் இந்தப் பதிவுகளிலிருந்து ஒரு சிறுபொறி கிட்டினாலும் நல்லதுதான் என்று அவர்களோடு சேர்ந்து நானும் நம்புகிறேன்.

பத்திரிகையாளர்கள் பலர் சுயசரிதைகள் எழுதியதுண்டு. ஆனால் அவர்கள் பத்திரிகைகளில் எழுதியவற்றின் தொகுப்புகள் தொகுக்கப்பட்டது மிகவும் அரிது. இன்றும் பல விஷயங்களில் எனக்கு ஆதர்சமாக விளங்கும் சிலரில் ஒருவனான பாரதியின் பத்திரிகைக் கட்டுரைகள் பெருமளவு தொகுக்கப்பட்டு நமக்குக் கிடைத்திருப்பது பெரும் பேறென்றே தோன்றுகிறது. இதுபோல தமிழ் இதழியல் முன்னோடிகளான திரு.வி.க., டி.எஸ்.சொக்கலிங்கம், ஏ.ஜி. வெங்கடாச்சாரி, கல்கி போன்ற பலரின் தினசரி, செய்திப்படைப்புக்கள் தொகுக்கப்பட்டிருந்தால் பல புதிய வெளிச்சங்கள் கிடைக்கக்கூடும். எழுத்தாளர் புதுமைப்பித்தன் தினசரிப் பத்திரிகையில் தினசரி என்ன எழுதினார், எப்படி எழுதினார், எந்த செய்தியை எப்படி வழங்கினார், என்பதைத் தெரிந்துகொள்ளமுடியும் என்றால் அது அன்றைய சமூகம் பற்றிய அவர் பார்வையை மட்டுமின்றி, ஒரு படைப்பாளி

*இன்னொரு துறையில் இயங்கும் விதத்திலிருந்து படைப்புமனத்தின் செயல்பாடுகளை மேலும் விளங்கவும் உதவியிருக்கக்கூடும்.*

*தினசரி செய்தித்தாளில் நிருபராக ஐந்தாண்டுகள் பணியாற்றிய அனுபவங்கள் எனக்கு நான் இயங்கும் பிறதுறைகளில் பெரிதும் பயன்பட்டிருக்கின்றன. நாடகத்திலும், வீடியோவிலும், புனைகதை எழுத்திலும் குழப்பமின்றித் தெளிவாக ஒன்றைத் தெரிவிப்பது என்ற வடிவ ரீதியான அம்சத்திலும் சரி, வாழ்க்கையின் பல்வேறு மட்டங்களில் வாழும் வெவ்வேறு மனிதர்களை சந்தித்து அவர்களை அறிகிற அரிய வாய்ப்பினால் என் சமூகப் பார்வையை-வாழ்க்கை பற்றிய தத்துவ தரிசனத்தை, செழுமைப்படுத்திக்கொள்ளவும் இந்த அனுபவங்கள் காரணமாய் இருக்கின்றன.*

*இந்த முதல் தொகுதியில் எழுபதுகளைப் பிரதிபலிக்கும் பல்வேறு கட்டுரைகளைத் தொகுக்கும்போது, 1982-ல் முதல்முறையாக வெளிவந்து, மூன்று இதழ்களோடு நின்றுபோன 'தீம்தரிகிட' இதழ்களின் கட்டுரைகளுடன் முடித்துக்கொள்ளக் கருதினோம். எனினும் அந்த காலகட்டத்தில் நான் கண்ட மூன்று மாறுபட்ட மனிதர்களின் - கமல்ஹாஸன், ரஜினி கோத்தாரி, வள்ளுவன் பேட்டிகளை மட்டும் நூல் நீளம் கருதி இதில் சேர்க்க இயலாமற்போயிற்று. அவை எண்பதுகளின் தொகுதியில் இடம்பெறும். பின்னர் தொண்ணூறுகளின் தொகுதியும் வெளியாகும்.*

*நான் செயற்படும் சகலதுறைகளிலும் என் அணுகுமுறை எப்போதுமே "தீவிரமான, ஆழமான விஷயங்களை நிறையபேரிடம் எளிமையாக விளங்கும் விதத்தில் பகிர்ந்துகொள்ள வேண்டும். நிறைய பேரிடம் பகிரவேண்டுமென்பதற்காக விஷயகனம் லேசாகிவிடத் தேவையும் இல்லை" என்பதாகவே இருந்து வந்திருக்கிறது. இதன் காரணமாக வெகுஜன சாதனக்காரர்கள் மத்தியில் நான் சிறுபத்திரிகைக்காரனாகவும் சிற்றிதழ் வட்டாரத்தில் மாஸ் மீடியா ஆசாமியாகவும் கருதப்படுகிற நிலைமை உண்டென்ற போதும் அது எனக்கு ஒரு பிரச்சனை அல்ல. தொகுதி நிமித்தம் மறுபடி படிக்கிறபோது எனக்கு எல்லா கட்டுரைகளிலும் இந்த அணுகுமுறையை நான் பின்பற்றியிருப்பது தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.*

*காலத்தை வென்றுநிற்கும் எழுத்துக்களை உருவாக்குவது ஒருபோதும் ஒரு பத்திகையாளனின் நோக்கமாக இருக்க முடியாது. வாழ்கிற காலத்தின் நிலைமையைத் துல்லியமாகப் பிரதிபலிப்பதும்*

அதைப் புரிந்துகொள்ள எழுதுவதும் மட்டுமே தினசரி, வாராந்தர இதழியலில் சாத்தியம். அந்த விதத்தில் நானும் என் காலத்தைப் பிரதிபலிக்க முயன்றிருகிக்றேன். சில இடங்களில் சறுக்கியிருக்கக் கூடும் எனினும் அவையும் யானை பிழைத்த வேல்கள் என்றே நம்புகிறேன்.

ஏதோ ஒரு மூலையில் எங்கோ ஒரு ஊரில் என் கட்டுரையைப் படித்துவிட்டு, சந்திக்க நேர்ந்த அபூர்வ தருணத்தில் அதைப்பற்றி ஞாபகமாகப் பேசுகிற, இன்னமும் பேசமுடியாமல் இருக்கிற வாசகர்களின் அன்பை நம்பியே இத்தொகுதி வருகிறது. நன்றி.

**சென்னை -14**

**ஞாநி**

**வீடியோ பட ஸ்கிரிப்ட் எழுதும்**
**பரபரப்புக்கு நடுவே 4-4-1993**
**பிற்பகல் 2 மணி**